

மேலும் இலவச பிரதிநிதிகளுக்கும்,
இலவச பத்திரிக்கை பிரதிநிதிகளுக்கும்,
எங்களை தொடர்பு கொள்ளுங்கள்


இந்தியாவில் இலவச பிரதிக்குத்
தொடர்பு முகவரி :

**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.

ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத்
தொடர்பு முகவரி :

**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk




# புது சிருஷ்டி

சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்

இதழ் 13

## கிறிஸ்டடெல்ஃபியர்கள் யார் ?

கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் (Christadelphians) என்ற பதம் கிரேக்க மூலமொழிகளாகிய Christ மற்றும் adelphos என்ற பதங்களிலிருந்து உருவானது. இதன் அர்த்தம் "கிறிஸ்துவில் சகோதரர்" என்பதாகும். கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் என்ற உலகளாவிய கிறிஸ்தவ சமுதாயம் 'வேதாகமத்தில் முழுமையாக நம்பிக்கை வைக்கிற' மக்கள் கூட்டமாகும். வேதவாக்கியங்களெல்லாம் தேவனால் அருளப்பட்டவை என்று உறுதியாக நம்புகிறார்கள்.

நாங்கள், தேவனுடைய (ஒரே பேறான) குமாரனாகிய இயேசு கிறிஸ்து வல்லமையோடு பூமிக்குத் திரும்பி வருவார் என்றும், அவர் வருத்தங்கள், அக்கிரமம், ஆக்கிரமிப்புகளை நீக்கி, தமது ஜனங்களுக்கு நியாயத்தையும், சமாதானத்தையும், நீதியையும் கொண்டு வருவார் என்றும் நம்புகிறோம்.

நாம் மரித்தாலும், மரித்தோரிலிருந்து எழும்பி, நியாயந்தீர்க்கப்படுவோம் என்று நம்புகிறோம். அத்துடன், இப்போது வாழும் வாழ்க்கையில் தன்னயமும் பொல்லாங்கும் நிறைந்து வாழ்ந்தவர்கள் நித்தியத்துக்கு வாழமுடியாமல் அழிக்கப்படுவார்கள். அதற்கு மாறாக, தேவனுடைய வார்த்தையை நம்பி கீழ்ப்படிந்து ஜீவித்தவர்கள் நித்தியமாக ஜீவித்திருப்பார்கள். மேலும் ஒவ்வொருவரின் வாழ்விலும் இரண்டு முக்கியமானவைகளை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று விசுவாசிக்கிறோம். அவைகளில் (1) தேவனிடம் முழு இருதயத்துடன் அன்பு கூர வேண்டும். (2) உன்னைப் போல பிறரை நேசிக்க வேண்டும்.

ஒருங்கிணைப்பாளர் : லினஸ் டேனியேல்
Email : linus@choose2live.info
வேதத்தின் சத்தியத்தை கேளுங்கள்
http// www.choose2live.info/new_creation
இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.
ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk
Website: www.readthebible.lk

### புது சிருஷ்டி பதிப்பாளர் குழு

லினஸ் டேனியேல் : தலைமை ஒருங்கிணைப்பாளர்
ராஜபட்சம் ஆனந்தா : மொழிபெயர்ப்பு, பதிப்பு மற்றும் கணினி ஒருங்கிணைப்பாளர்
பவித்ரா : நிர்வாகம், உபப்பதிப்பாளர்

திருமதி கிலாடிஸ் சுகிர்தராஜ். சந்திர மோகன் மற்றும் திருமதி சாந்தி பவுல் அவர்களின் தமிழ் மொழிபெயர்ப்பு உதவிகளுக்காக சிறப்பான நன்றி கூறுகிறோம்.

இந்த பத்திரிகையின் வாயிலாக, வேதவாக்கியங்களை வாசிக்க உங்களைத் தூண்டுவதே எங்கள் குறிக்கோள். இதிலுள்ள கட்டுரைகள் உங்களை ஆவிக்குரிய வளமூட்டி வளர்க்க உற்சாகப்படுத்தும் என நம்புகிறோம். நம்மை இரட்சிப்புக் கேற்ற ஞானமடையச் செய்வதால் வேதாகமத்தைத் தினமும் வாசிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

இந்த பத்திரிகையில் காணப்படும் எல்லா கட்டுரைகளும் அனைத்துலக கிறிஸ்டடெல்ஃபிய வழிமுறை யிலிருந்து தெரிந்தெடுத்து மொழி பெயர்ப்பு செய்து பிரசுரமாகியுள்ளன.

*"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2. கொரிந்தியர் 5:17).*



# தேவனின் புதிய சமுதாயம் (பகுதி 1)

முதல் நூற்றாண்டுக் காலத்திற்கு நாம் பயணித்துச் செல்லக்கூடுமானால்.... ஆதி விசுவாசிகள் எப்படி இருந்திருப்பார்கள்? வேதவாக்கியங்களை வழிகாட்டியாகக் கொண்டு 'டாம் பார்லிங்' இத்தொடர் கட்டுரைகளில், ஆதி விசுவாசிகள் மத்தியில் தேவன் உருவாக்கி வந்த புதிய சமுதாயத்தை நாம் காணத்தக்கதாக, நம்மைக் கற்பனைப் பயணமொன்றில் அழைத்துச் செல்கிறார்.

## காலப் பயணம்



நம் கற்பனைக் காலப்பயணப் பொறியில் ஏறி கி.பி.60ம் ஆண்டுக்கு வேகமாகப் பயணித்துச் செல்வோம். ரோம ஆளுகைக்குட்பட்ட பிராந்தியத்திலுள்ள ஒரு நகரத்திற்குச் செல்லப் போகிறோம். இப்பொழுது துருக்கி எனப்படும் நாட்டில் அன்றைய கொலோசே பட்டணத்திற்குச் செல்கிறோம்.

வாரத்தின் முதல்நாள் என்றறியப்பட்ட ஒரு ஞாயிற்றுக்கிழமை அது. பிலிமோன் என்ற பெயர் கொண்ட ஒரு செல்வந்தன் வீட்டிற்குச் செல்கிறோம். கி.பி.79ல் விசுவியஸ் எரிமலை இத்தாலியில் வெடித்துச் சிதறியபோது அழிந்த பம்பீ நகரத்தில் தோண்டியெடுக்கப்பட்ட ஒரு பெரிய மாளிகை அந்த பிலேமோனுக்குச் சொந்தமாக இருந்தது. அவன் வீடு விரிந்த விசாலமான பங்களா.

பிலேமோன் வீட்டில் அவ்வூர் கிறிஸ்தவர்கள் ஒன்றுகூடி, புதிய ஏற்பாடு கூறும் 'அப்பம் பிட்குதல்' எனும் ஒரு எளிய நிகழ்ச்சியில் பங்கு கொள்வார்கள். இயேசுவின் தியாகபலியை நினைவு கூருவதற்காக அப்படிச் செய்வது வழக்கம் (1 கொரிந்தியர் 11:23-26 பார்க்கவும்). அச்சமயத்தில் வேத வாக்கியங்கள் வாசித்தல், ஜெபங்கள், ஆராதனை ஆகியவையும் இடம் பெற்றன.

## பலவகையினர் கலந்த சமுதாயம்

அப்படி கூடிவந்தவர்களில் அசாதாரணமான ஒன்று காணப்பட்டது. அவர்களை விருந்தோம்பிய செல்வச் சீமானான பிலேமோன் அங்கிருந்தான். அதேசமயம் ஒநேசிமு எனும் பெயர் கொண்ட அடிமை ஒருவனும் அங்கிருந்தான். இருவரும் சமம் என்பதுபோல, இருவருமே அப்பம் மற்றும் திராட்சரசத்தில் ஏடுத்துக்கொள்வதில் பங்கு கொண்டார்கள். ரோம சமுதாயத்தில் அது மிகவும் அசாதாரணமான ஒன்று. இத்தகைய உரிமை அடிமைகளுக்குக் கிடையாது. சிலசமயங்களில் குரூரமானவனும் கடுமையாக வேலை வாங்குபவனுமாகிய எஜமானால் அவர்கள் ஆடுமாடுகளைப்போல் நடத்தப்படுவதும் உண்டு. மனிதாபிமானமுள்ள மக்களும் சிலர் இருந்தது உண்மைதான். அவர்கள் நல்ல அடிமை ஒருவன் இருந்தால், அவனுக்கு விடுதலை அளித்துவிடுவார்கள்.

ஆனால் ஒரு அடிமைக்கு மரணத் தண்டனை அளிக்கக்கூடிய குற்றம் ஒன்று இருந்தது. அவன் ஓடிப்போனால் மரணதண்டனைதான். அதுவும் தன்

எஜமானுடையதைத் திருடிவிட்டு ஓடினால் குற்றம் இன்னும் பயங்கரமானது. இதைத் தான் ஒநேசிமுவும் செய்திருந்தான். ஆக, மிக அசாதாரணமான இந்த சூழ்நிலை எப்படி வந்திருக்கக் கூடும் என நம்மையே கேட்கத் தோன்றுகிறதல்லவா ?

## பிலேமோனுக்கு எழுதிய கடிதம்

இக்கேள்விக்கு விடைகாண, ஒநேசிமுவுக்கு எஜமானனான பிலேமோனுக்குப் பவுல் அப்போஸ்தலன் எழுதிய மிக அருமையானதொரு கடிதத்தை நாம் படிக்க வேண்டும். இந்தச் சின்னக் கடிதம், நாம் பயன்படுத்தப்போகிற ஏராளமான தகவல்களைத் தருகிறது. ஆனால் முதலில் நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயம் ஒன்று உண்டு. இந்தக்கடிதத்தை எழுதிய சமயம், அப்போஸ்தலனாகிய பவுல் ரோம சக்ரவர்த்தி முன் தான் நியாயம் விசாரிக்கப்படுவதற்காகக் காத்துக் கொண்டிருந்த கைதியாக இருந்தார். அவர் சொந்தநாட்டு மக்களால் அவர்மீது கொண்டுவரப்பட்டக் குற்றச்சாட்டுகளுக்கு அவர் பதிலளிக்க வேண்டியிருந்தது.

அவர் கைதியாயிருந்தாலும், நிபந்தனைகள் மிகவும் தளர்த்தப்பட்டிருந்தன. சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க அவருக்குச் சுதந்திரம் இருந்தது. நண்பர்களும் அவரிடம் வருவதற்கு அனுமதி இருந்தது. எப்படியோ, நமக்குத் தெரியாத ஒரு வகையில் ரோமாபுரியில் பவுல் ஒநேசிமுவைச் சந்தித்தார். எஜமானை விட்டு ஓடிப்போன இந்த அடிமை, பவுலைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் அவனுடைய எஜமானான பிலேமோன் பவுல் அப்போஸ்தலனால் இரட்சிப்புக்குள் வழிநடத்தப்பட்டிருந்தார்.

## ஓடிப்போன அடிமை

பிலேமோனுக்கு எழுதப்பட்ட கடிதத்தில் நாம் அறிவது என்னவெனில் ஒநேசிமு கொலோசேயை விட்டு ஓடிப்போய் விட்டான். மேலும், அவன் தன் எஜமானின் சில பொருளையும் தன்னோடு எடுத்துக்கொண்டு போய்விட்டான். ஏனெனில் பவுல் பிலேமோனுக்கு மிக சுகமாகக் கீழ்க்கண்டவாறு எழுதுகிறான்.

*“அவன் உமக்கு யாதொரு அநியாயஞ் செய்ததும், உம்மிடத்தில் கடன் பட்டதும் உண்டானால் அதை என் கணக்கிலே வைத்துக் கொள்ளும்” (வ. 18).*

கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் மனம் மாறி ஞானஸ்நானம் பெற்ற, ஒநேசிமு



பவுலுக்கு மிகவும் நன்றாக ஊழியம் செய்தான். ஆகவே பவுல் அவனைத் தன்னோடு வைத்துக்கொள்ள விரும்பினார். (வ.13) ஆனால் அது தவறு என்றும் பவுல் எண்ணினார். ஆகவே, பவுல் பிலேமோனுக்கு எழுதிய கடிதத்தை எடுத்துக்கொண்டு ஒநேசிமு திரும்ப கொலோசேக்குச் செல்வது தான் சரி என்று எண்ணினான். கடந்த காலநிகழ்வை மறக்கவேண்டும் - ஒநேசிமுவை மன்னித்து, அவனைக் கிறிஸ்துவுக்குள் ஒரு சகோதரனாக ஏற்றுக் கொள்ளவேண்டும் என பவுல் அந்தக் கடிதத்தில் கேட்டுக் கொண்டான்.



அதையே பிலேமோன் செய்தான் என்பது தெளிவு. இரட்சிப்பின் சுவிசேஷம் எப்படி சமுதாயத் தடைகளை நீக்கி, ரோம உலகத்தில் ஒரு புதுவித சமுதாயத்தை உருவாக்கி வந்தது என்பது குறித்த ஒரு விசேஷித்த அறிவை நமக்குத் தருகிறது.

## பயணத் தோழன்

ரோமாபுரியிலிருந்து கொலோசேக்குத் தன் நெடும் பயணத்தை ஒநேசிமு ஆரம்பிக்கையில் அவன் தனியாகச் செல்லவில்லை. கொலோசேயிலுள்ள அனைத்து விசுவாசிகளுக்கென்று (கொலோசெயர் 1:2) எழுதப்பட்ட ஒரு நிரூபத்தை எடுத்துச் சென்ற தீகிக்கு (கொலோசேயர் 4:7-9 பார்க்கவும்) என்பாரின் துணையோடு பயணித்தான். வாரத்தின் முதல் நாளிலே அப்பம்பிட்கும்படி சபையார் கூடிவரும்போது இப்படி கொண்டு வரப்பட்ட நிருபத்தை வாசிப்பது வழக்கமாயிருந்தது. இந்தத் தடவை இந்த விசேஷித்த சமயத்திற்குப் பொருந்துமாறு பவுல் எழுதினார்.

ஆகவே, பிலேமோனும் ஒநேசிமுவும் மிகுந்த கவனத்தோடு கடிதம் வாசிக்கப்பட்ட போது கேட்டிருப்பார்கள் எனக் கற்பனை செய்யத் தோன்றுகிறது. மூன்றாம் அதிகாரத்தின் ஆரம்பம் எல்லாவயதினருமே பூமிக்கடுத்த காரியங்களில் மனதை வைக்காமல் மேலானவைகளை வாஞ்சிக்க வேண்டுமென நினைவு படுத்துகிறது. ஏனெனில் *“நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது” (3:2-3).*

தங்கள் பழைய வாழ்க்கைப் பாணியை (மாதிரியை) விட்டொழித்து, கிறிஸ்து இயேசுவுக்குள் ஒரு புது வாழ்க்கை வாழும்படி அழைக்கப்பட்ட ஆண்கள் பெண்களைக் கூட்டி ஒரு புதிய சமுதாயம் உருவாக்குவது திட்டமாக இங்கே தான் நடக்கிறது. 3ம் அதிகாரத்தின் பின்பகுதியில் இவையெல்லாமே அழுத்திக் கூறப்படுகிறது.

*“அதிலே கிரேக்கனென்றும் யூதனென்றுமில்லை; விருத்தசேதனமுள்ளவனென்றும் விருத்தசேதனமில்லாதவனென்று மில்லை, புறஜாதியானென்றும் புறதேசத்தானென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை; கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாமுமாயிருக்கிறார். ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும், தரித்துக் கொண்டு, ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர் பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால் கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். இவை எல்லாவற்றின் மேலும், பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக் கொள்ளுங்கள்” (கொலோசெயர் 3:11-14).*

இந்த வார்த்தைகள் வாசிக்கப்படுகையில், திட்டமாகவே பிலேமோன் ஒநேசிமு பக்கம் திரும்பி அவர்கள் கேட்டவைகளை அங்கீகரித்தவராய், தலையை அசைத்திருப்பார், அவர் முகத்தில் அன்பான மன்னிப்பின் புன்னகை தவழ்ந்திருக்கும்.

**- டாம் பர்லிங்**

# சபை என்பதன் உண்மையான அர்த்தம்

'எக்ஷியா' என்பது ஒரு கிரேக்க பதம். இது புதிய ஏற்பாட்டில் நூறு தடவைக்கும் மேலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. சபை அல்லது சபைகள் என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்த வார்த்தை இரு வார்த்தைகளிலிருந்து வருகிறது.



எக் (....லிருந்து), கலியோ (அழைத்தல்). இரு தனி வார்த்தைகளாக மத்தேயு 2:15ல் உள்ள மேற்கோளில் பயன்படுத்தப்பட்டுள்ளன. *''எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன்."*

### குறிப்பிட்ட சபைகள் மற்றும் பொதுவாக சபை

'சபை' என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதில் உலகிலுள்ள குழப்பத்தைத் தவிர்க்க கிறிஸ்டடெல்ஃபியர்கள் பொதுவாக 'எக்லீஷியா' என்ற பதத்தையே பயன்படுத்துகின்றனர். புதிய ஏற்பாட்டு மேற்கோள்களில் சபை என்பதற்குப் பதில் இக்கட்டுரையில் 'எக்லீஷியா' என்ற வார்த்தையே பயன்படும். குறிப்பிட்ட இடங்களிலுள்ள விசுவாசிகளின் குழுவை 'எக்லீஷியா' என்றழைக்கலாம்.

1. எருசலேமிலுள்ள சபை (அப்போஸ்தலர் 8:11)
2. அவர்கள் வீட்டிலே கூடிவருகிற சபை (ரோமர் 16:5)
3. லவோதிக்கேயா சபை (கொலோசெயர் 4:16)
4. தெசலோனிக்கேயர் சபை (1. தெசலோனிக்கேயர் 1:1)

'எக்லீஷியா' என்பது 'விசுவாசிகளனைவரையும்' குறிக்கும் சொல்லாகவும் உள்ளது.

1. "இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்." (மத்தேயு 16:18)
2. "தேவனுடைய சபையைத் துன்பப்படுத்தினேன்" (1. கொரிந்தியர் 15:9)
3. "கிறிஸ்துவைப் பற்றியும் சபையைப் பற்றியும்" (எபேசியர் 5:32)

### எக்லீஷியாவும் வாக்குத்தத்தங்களும்

எபிரெயர் 2:12ல் சங்கீதம் 22:22 மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. எபிரெய வார்த்தை க்கஹல் (சபை) என்பதை 'எக்லீஷியா' என கிரேக்க மொழியில்



மொழிபெயர்த்திருக்கிறார்கள். முதன்முதலாக 'க்கஹல்' ஆதியாகமம் 28ல் வருகிறது. அது கூட்டம் என மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. *"சர்வ வல்லமையுள்ள தேவன் உன்னை ஆசீர்வதித்து நீ பல ஜனக்கூட்டமாகும்படி உன்னைப் பலுகவும் பெருகவும் பண்ணி" (ஆதி 28:3).* இப்படி 'எக்லீஷியா'வின் ஆரம்பம் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபுக்கு அளித்த வாக்குத்தத்தங்களில் காணப்படுகிறது. அதன்பின் யாக்கோபு ஒரு கல்லைத் தூணாக நிறுத்தி அதை 'தேவனுடைய வீடு' என்றழைத்தான். (ஆதி 28:22). பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது இதைக் குறிப்பிட்டு எக்லீஷியாவை வீடு என்றும் தூண் என்றும் கூறுகிறார். *"அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் (எக்லீஷியா) சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாய் இருக்கிறது"* (1 தீமோத்தேயு 3:15).

### எக்லீஷியாவும் கிறிஸ்துவும்

கிறிஸ்துவைத் தலையாகக் கொண்ட சரீரத்திற்கு ஒப்பாக 'எக்லீஷியா' கருதப்படுகிறது. "அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்" (கொலோசெயர் 1:18) ''நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும் தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்." (1 கொரிந்தியர் 12:27) ஒரு சரீரத்தில் தன் தன் வேலையைச் செய்யும் வெவ்வேறு பாகங்கள் இருப்பது போல் தங்கள் தங்கள் வேலைகளைக் கொண்ட அநேக சகோதர சகோதரிகளால் ஆனது எக்லீஷியா. *"சரீரம் முழுவதும் கண்ணானால் செவி எங்கே? அது முழுவதும் செவியானால் மோப்பம் எங்கே? தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார்" (வ.17,18).* சரீரத்தின் அங்கங்களாக இருக்கும் சகோதர சகோதரிகள் பிரிவினைகளைத் தவிர்க்க வேண்டும். ''ஒருவரைக் குறித்து ஒருவர் கவலையாயிருக்கவேண்டும்." (வ.25) கிறிஸ்து மணவாளனாகவும் (புருஷன்) எக்லீஷியா மணவாட்டி (மனைவி)யாகவும் எபேசியர் 5ல் ஒப்பிடப்பட்டிருக்கிறது. *"கிறிஸ்து எக்லீஷியாவுக்குத் தலையாயிருக்கிறதுபோல புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்" (வ.23).* "எக்லீஷியாவானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறது போல, மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்கவேண்டும். ஒரு புருஷன் தன் மனைவியை நேசிப்பது போல கிறிஸ்துவும் தன் எக்லீஷியாவை நேசிக்கிறார். அவரின் அன்பு எத்தகையது என்றால், எக்லீஷியாவிற்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார் (வ 25). மணமகள் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரிக்கப்பட வேண்டும் (வ.26). ஆகவே எக்லீஷியாவின் வாழ்க்கையில் தேவனுடைய வசனம் மையப் பங்கு வகிக்க வேண்டும்."

### சபை வாழ்க்கை

சபை வாழ்க்கையின் மையப் பாகம், அப்பம் பிட்டு, திராட்சரசம் பானம் பண்ணுவதன் மூலம் கிறிஸ்துவின் தியாகபலியை நினைவு கூருவதாகும். பொதுவாக, இது வாரத்தின் முதல் நாளில் (அப்போஸ்தலர் 20:7) நடைபெறுகிறது. வாரத்தின் முதல் நாளில் கூடுவது சரியான சமயம் தான், அப்போது காணிக்கை

எடுக்கப்படலாம் (1. கொரிந்தியர் 16:2). நாம் கூடி வரும்போது ஒருவருக்கொருவர் புத்தி சொல்ல வேண்டும். *"சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறது போல நாம் விட்டுவிடாமல்,* ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்" (எபிரெயர் 10:25).

*'எக்லீஷியா'வுக்கு ஏற்றாற்போல் வரும் இன்னொரு பழைய ஏற்பாட்டு வார்த்தை 'மிக்ரா' என்பதாகும். "எகிப்திலிருந்து என் குமாரனை வரவழைத்தேன்" (ஓசியா 11:1)* என்பதில் உபயோகிக்கப்பட்ட வார்த்தைகளே இதிலும் பயன்பட்டிருக்கின்றன. ஒரு பண்டிதரின் பொருளகராதியில் இதன் பொருள் 'பிரித்து அழைக்கப்பட்டது' என்பது. பரிசுத்த சபை (யாத்திராகமம் 12:16) எனவும் சபைக்கூட்டங்கள் (ஏசாயா 1:13) எனவும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. நெகேமியா 8, சபை கூடினால் என்னென்ன செய்யப்படவேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

ஒருமனப்பட்டுக் கூடி (வ. 1)

தேவனுடைய வார்த்தையை வாசித்தான் (வ. 3)

தேவனை ஆராதித்தார்கள் (வ. 6)

வசனத்தை விளங்கப்பண்ணினான் (வ. 7)

போதித்தான் (வ. 9)

வார்த்தைகளை உணர்ந்து கொண்டபடியால் மிகுந்த சந்தோஷம் (வ. 12)

### வேறு குறிப்புகள்

எக்லீஷியாவின் (சபையின்) உறுப்பினர் ஒருவர் தவறான நடத்தையில் தொடர்ந்து இருப்பாராயின் அவன் அல்லது அவளைவிட்டு விலகவேண்டும். *"மேலும் சகோதரரே, எங்களிடத்தில் ஏற்றுக்கொண்ட முறைமையின்படி நடவாமல், ஒழுங்கற்று நடக்கிற எந்தச் சகோதரனையும் நீங்கள் விட்டு விலகவேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குக் கட்டளையிடுகிறோம்." (2. தெசலோனிக்கேயர் 3:6).*

வெளிப்படுத்தின விசேஷத்தில் ஏழு சபைகளுக்கு எழுதப்பட்ட கடிதங்கள் எக்லீஷிய வாழ்க்கை பற்றி நமக்கு ஏராளமான அறிவுரை அளித்துள்ளன. ஆவிக்குரிய ஆரோக்கியம் சபைகளில் வேறுபடுகிறது. எடுத்துக்காட்டாக, எபேசு சபையினர் அவர்களின் கிரியை, பிரயாசம், பொறுமை, தீமையை சகிக்காதது, கிறிஸ்து வெறுத்தவைகளை அவர்கள் வெறுத்தது போன்றவற்றிற்காகப் பாராட்டப்பட்டனர். ஆயினும் அவர்கள் "ஆதி அன்பை" விட்டுவிட்டனர். (வெளிப்படுத்துதல் 2:2-6). ஆனால் லவோதிக்கேய சபையினர் உலகப்பிரகாரமாக செல்வந்தராயிருந்தாலும், ஆவியிலே *"நிர்ப்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமா யிருப்பதாகக்" கடிந்து கொள்ளப்பட்டார்கள் (வெளிப்படுத்தல் 3:17)".*



# ஐக்கியங்கொள்ளுதலின் பொருளும் உட்பொருளும்

பெந்தேகொஸ்தே நாளில் 3,000 பேர் ஞானஸ்நானம் பெற்று 'அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்' (அப்போஸ்தலர் 2:42). ஆதித்திருச்சபையின் ஆரம்ப காலத்திலிருந்தே அவர்கள் மத்தியில் அந்நியோந்நியம் (நெருங்கிய ஐக்கியம்) இருந்தது. ஆனால் அதன் அர்த்தம் என்ன? மூல கிரேக்க வார்த்தை 'பொதுவான' எனும் அர்த்தம் கொள்ளும் வார்த்தையிலிருந்து வருகிறது. ஆகவே அந்நியோந்நியம் என்பது விசுவாசிகள் பொருட்களைப் பொதுவாக வைத்திருந்து பகிர்ந்து கொள்ளுதலைக் குறிக்கிறது.



ஆனால் விசுவாசிகள் எதைப் பொதுவாக வைத்திருக்கிறார்கள்? அவர்கள் நம்பிக்கை வைத்திருக்கும் விஷயங்களைத் தான். உபதேசம் (கொள்கை, கோட்பாடு) அந்நியோந்நியத்திற்கு முந்தி வருகிறதைக் கவனியுங்கள். ஒப்புக் கொள்ளப்பட்ட கொள்கை கோட்பாட்டின் அடிப்படையிலே விசுவாசிகள் ஒருவரோடொருவர் ஐக்கியம் கொள்ளுகின்றனர். இந்தக் கோட்பாடுகளை ஆரம்பித்தது மனிதனல்ல. அப்போஸ்தலர்களுடைய உபதேசம் தான் விசுவாசிகளை ஒற்றுமையாக ஐக்கியம் கொள்ளச் செய்தது - அதாவது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் பரிசுத்த ஆவியினாலும் வெளிப்படுத்தப் பட்டபடியே அப்போஸ்தலர் போதித்த காரியங்கள்:

### தேவனோடும் கிறிஸ்துவோடும் ஐக்கியம்

அந்நியோந்நியம் என்பதற்கு 1. யோவான் 1:3 இன்னொரு கருத்தைத் தருகிறது. விசுவாசிகள் தேவனோடும் கிறிஸ்துவோடும் ஐக்கியம் கொண்டிருப்பதைப் பற்றியது. அப்போஸ்தலனாகிய யோவான், இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சத்தியத்தை அறிவிக்கும் தனது அப்போஸ்தல ஊழியத்தைக் குறித்துப் பேசுகையில்: "நீங்களும் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி, நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கும் அறிவிக்கிறோம். எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது" (வ.3). இந்த அதிகாரத்தில்

ஒரு விசுவாசி கொள்ளும் ஐக்கியம் நான்கு விதமானது.

1. பிதாவோடு
2. அவருடைய குமாரன் இயேசுவோடு
3. எங்களோடு (அப்போஸ்தலரோடு)
4. ஒருவரோடொருவர் (வ.7).

அப்போஸ்தலருடைய உபதேசத்தை ஏற்றுக்கொள்ளுகிறதினால் ஐக்கியம் வருகிறது. உபதேசத்தை ஏற்றுக்கொள்ளுகிறவர்கள் இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனோடு ஒரு பிரத்தியேகமான உறவுக்குள் வருகிறார்கள். இப்படிச் செய்கிறவர்கள் எல்லாருமே ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருக்கிறார்கள்.



## ஐக்கியத்திற்கு வருதல்

இந்த வழிகளில் ஐக்கியங்கொள்ள ஒருவன் வருவதெப்படி? பெந்தேகொஸ்தே நாளில் பேதுருவின் போதனையை விசுவாசித்து, மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறும்படி அழைத்ததற்கு இணங்கி அதன்படி செய்தவர்களே, அப்போஸ்தலரின் ஐக்கியத்தில் இருந்தார்கள். ஞானஸ்நானத்தினால் ஒருவன் இயேசு கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலோடு இணைந்தவனாகி, அதன் விளைவாய் பாவங்கள் மன்னிக்கப்பட்டவனாய், தேவனோடும் கிறிஸ்துவோடும் ஒரு புது உறவுக்குள் வருகிறான் (கொலோசெயர் 2:13,14).

விசுவாசம் மற்றும் ஞானஸ்நானத்தினால் கிறிஸ்துவுடன் ஐக்கியம் என்பது அந்நியோந்நியம் என்பதன் மையக் கருத்து கிறிஸ்துவுக்கும் அவருடைய விசுவாசிகளுக்குமிடையே இருக்கும் ஐக்கியம் பல்வேறு விதங்களில் வேதவாக்கியங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. எடுத்துக்காட்டாக விசுவாசிகள் கிறிஸ்துவுக்குள் ஒன்றாயிருக்கிறார்கள். ஆகவே ஆபிரகாமின் வித்தின் பகுதியாகவும், அவனுக்கு அளிக்கப்பட்ட வாக்குத்தத்தங்களுக்குச் சுதந்தரவாளிகளாகவும் இருக்கிறார்கள் (கலாத்தியர் 3:26-29).

2. கிறிஸ்துவும் விசுவாசிகளும் ஒன்றாகக் கருதப்படுகிறார்கள், கிறிஸ்து தலையாகவும் விசுவாசிகள் சரீரமாயும் இருக்கிறார்கள் (எபேசியர் 1:22,23).

3. கிறிஸ்து 'மெய்யான திராட்சச் செடி' விசுவாசிகள் 'கொடிகள்.' (யோவான் 15:1-6).

## ஐக்கியத்தைக் காத்துக்கொள்ளுதல்

கிறிஸ்துவின் இரட்சிப்பின் கிரியையோடு இணைந்த தொடர் செயலாக அப்பம் பிட்குதல் திராட்ச ரசத்தைப் பானம் பண்ணுதல் ஆகியவற்றில் ஒழுங்காகப் பங்கு கொள்வதன் மூலம் ஞானஸ்நானம் எடுத்த விசுவாசிகள் ஐக்கியத்தில் தொடர்ந்து இருக்கிறார்கள். பெந்தேகொஸ்தே நாளில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள். "வீடுகள் தோறும் அப்பம் பிட்டு" (அப்போஸ்தலர் 2:42,46). பவுல் அப்போஸ்தலன் இவ்வாறு எழுதுகிறார்.

"நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்கு பெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம். (1. கொரிந்தியர் 10:16,17). ஐக்கியம், அந்நியோந்நியம் இரண்டும் ஒரே பொருளுடையவை. அந்த அடையாளங்களில் ஒற்றுமையாகப் பங்கு கொள்வதால், விசுவாசிகள் கிறிஸ்துவோடும் ஒருவரோடொருவரும் தங்கள் ஐக்கியத்தைப் புதுப்பித்துக்கொள்கிறார்கள். ஞானஸ்நானத்தின்போது அவர்கள் விசுவாசித்த அப்போஸ்தல உபதேசத்தை உறுதியாய் பற்றிக் கொள்வதன் மூலமாகவும் விசுவாசிகள், ஐக்கியத்தைத் தக்க வைத்துக் கொள்கிறார்கள். இந்தக் காரியங்களைச் செய்யாமல் விட்டுவிடுகிறவர்கள் உண்மையில், ஐக்கியத்தில் இருப்பதில்லை. "நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும், இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால், சத்தியத்தின்படி நடவாமல் பொய் சொல்லுகிறவர்களாயிருப்போம்" (1. யோவான் 1:6). சத்தியத்தின்படி நடப்பதென்றால் அப்போஸ்தலரால் உபதேசிக்கப்பட்ட மெய்யானக் கோட்பாடுகளை விசுவாசிப்பதும் அவைகளுக்கேற்றபடியான வாழ்க்கை முறையைப் பின்பற்றுவது மாகும். இருப்பினும் பெலவீனத்தினிமித்தம் எல்லாரும் பாவம் செய்கிறோம். *"ஒளியில் நடக்கிறவர்களுக்கு... அவருடைய (தேவனின்) குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்"* (வ.7). ஐக்கியத்தில் இருப்பதென்றால் இருளில் நடப்பவர்களினின்று பிரிந்திருப்பதையும் உள்ளடக்கியது. 2. கொரிந்தியர் 6:14-18ல் விக்கிரகாராதனையிலிருந்து வெளியே வந்துவிட்டவர்களுக்குப் பவுல் எழுதும்போது, ஞானஸ்நானம் பெற்ற விசுவாசிகள் தேவனுடைய மக்களாக இருப்பதை அடிப்படையாகக் கொண்டு பிரிந்திருப்பது பற்றிய கொள்கைகளை முன்வைத்து, "ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது?" எனக் கேட்கிறார்.

## நடைமுறையில் ஐக்கியத்தில் நிலைத்திருத்தல்

மெய்யான ஐக்கியத்தில் நிலைத்திருக்க, சில நடைமுறைப் படிகள் தேவைப்படுகின்றன. அவைகளில் முக்கியமானவை:

1. ஞானஸ்நானம் பெற்றவர்கள் அப்போஸ்தலரால் போதிக்கப்பட்ட கோட்பாடுகளை அறிந்து அவற்றை விசுவாசிக்கிறார்களா என்பதை உறுதி செய்து கொள்ளுதல்.

2. உண்மையான ஐக்கியத்தில் இருப்பதென்றால், சில காரியங்கள் ஒத்துவராது. எடுத்துக்காட்டு. சகமனிதர்களைக் கொல்லும் ராணுவ சேவையில் சேர்வது அல்லது பிறரிடம் தவறாக நடந்து கொள்வது.

3. ஞானஸ்நானம் பெற்றவர்கள் மட்டுமே மேற்கண்ட கொள்கைகளை ஒத்துக் கொள்ளும் சபையின் அங்கத்தினராகிறார்கள் (திராட்சைரசம் அருந்துவதிலும் சேர்ந்து கொள்ளலாம்) தவறான நம்பிக்கைகள் அல்லது நடத்தையினால் 'ஒளியில் நடப்பதை' விட்டுவிட்டவர்கள் சபையிலே அப்பம் பிட்பதற்கு அனுமதிக்கப்படாமலிருப்பதை உறுதி செய்தல். "நான் உங்களுக்கு எழுதுகிறதென்னவென்றால், சகோதரனென்னப்பட்ட ஒருவன் விபசாரக்காரனாயாவது, பொருளாசைக்காரனாயாவது, விக்கிரகாரார்தனைக் காரனாயாவது, உதாசீனனாயாவது வெறியனாயாவது, கொள்ளைக்காரனாயாவது இருந்தால், அவனோடே கலந்திருக்கக்கூடாது, அப்படிப்பட்டவனுடனே கூடப் புசிக்கவுங்கூடாது. புறம்பே இருக்கிறவர்களைக் குறித்துத் தீர்ப்புச் செய்கிறது என் காரியமா ? உள்ளே இருக்கிறவர்களைக் குறித்தல்லவோ நீங்கள் தீர்ப்புச் செய்கிறீர்கள் ? புறம்பே இருக்கிறவர்களைக் குறித்து தேவனே தீர்ப்புச் செய்வார். ஆகையால் அந்தப் பொல்லாதவனை உங்களை விட்டுத் தள்ளிப்போடுங்கள்" (1. கொரிந்தியர் 5:11-13).

மேற்குறித்த காரியங்கள் உண்மையான ஐக்கியத்தில் நிலைத்திருக்க நாம் எடுக்கக்கூடிய சிறந்த முயற்சிகளைக் காட்டுகின்றன. ஆயினும் மனித பெலவீனத்தினிமித்தம் நாம் அவ்வளவு பரிபூரணமாகக் கிரியை செய்வதில்லை.

### ஐக்கியத்தில் பொறுப்புகள்

சகோதர சகோதரிகள் கொண்டிருக்கும் ஐக்கியம் ஆச்சரியமானது. உலகின் எல்லா பாகங்களிலிருந்தும், அனைத்து வாழ்க்கைத் தரங்களிலிருந்தும், எல்லா வயதினரையும் இரு பாலாரையும் ஒற்றுமைப்படுத்துகிறது. விசுவாசிகளுக்குள்ளான இந்தப் பிரத்தியேகமான ஐக்கியம் தன்னோடு கடமைகளையும் கொண்டு வருகிறது. இங்கே சில எடுத்துக்காட்டுகள் தரப்பட்டுள்ளன.

*1. "நீங்கள் (பிலிப்பிய சபை) என் (பவுலின்) உபத்திரவத்தில் என்னோடே உடன்பட்டது நலமாயிருக்கிறது" (பிலிப்பிர் 4:14).*

*2. "அன்றியும் நன்மை செய்யவும், தானதர்மம் பண்ணவும் மறவாதிருங்கள்; இப்படிப்பட்ட பலிகளின் மேல் தேவன் பிரியமாயிருக்கிறார்" (எபிரெயர் 13:16).*

*3. "தங்களுக்கும் (எருசலேம் சபை) மற்ற அனைவருக்கும் நீங்கள் (கொரிந்திய சபை) உதாரத்துவமாய்த் தர்மஞ் செய்கிற தினிமித்தம்...." (2. கொரிந்தியர் 9:13)*

*4. "பரிசுத்தவான்களுடைய குறைவில் அவர்களுக்கு உதவி செய்யுங்கள். அந்நியரை உபசரிக்க நாடுங்கள்" (ரோமர் 12:13).*



# கரடிகள் பற்றிய சில உண்மைகள் பரிணாமக் கொள்கையினருக்கு




நீங்கள் கண்ணால் காண்பதைவிட, தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் இன்னும் உண்டு ! முதலாவது, இந்த வெண்மயிர்ப் போர்வை வெள்ளை நிறமல்ல - அது கண்ணாடி போல் ஒளி ஊடுருவக் கூடியது. உண்மையில் அந்த மயிர் ஒரு மெல்லிய குழாய் (**Fibre optic** போல) ஒவ்வொரு மயிரும் ஒளியை (புறஊதாக் கதிர்களை) என் தோல் வரை கடத்துகிறது. ஏனெனில் வெப்பம் பெற எனக்கு அந்த அளவிற்கு சக்தி தேவை. அறிவியலாளர்களாகிய நீங்கள் சமீபத்தில் தான் ஃபைபர் ஆப்டிக்கைக் கண்டுபிடித்தீர்கள். நாங்கள் என்றுமே இப்படித்தான் படைக்கப்பட்டிருக்கிறோம்.



இன்னும் கேளுங்கள். கறுப்பு நிறம் வெப்பத்தை உள்வாங்கிக் கொள்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். ஆகவே என் தோலின் நிறம் கறுப்பாகத் தான் படைக்கப்பட்டுள்ளது.



இதெல்லாம் தானாகவே சம்பவித்தது என்று சொல்வாயானால், நீ ஒரு கரடி-முகப் பொய்யன்.

# அன்பின் கட்டுகள்

(மணித்துளி தியானங்கள்)

“மணவாட்டியை உடையவனே மணவாளன், மணவாளனுடைய தோழனோ, அருகே நின்று, அவருடைய சொல்லைக் கேட்கிறவனாய் மணவாளனுடைய சத்தத்தைக் குறித்து மிகவும் சந்தோஷப்படுகிறான், இந்தச் சந்தோஷம் இப்பொழுது எனக்குச் சம்பூரணமாயிற்று.”



யோவான் ஸ்நானகனின் இந்த வார்த்தைகள் இன்றும் பயனுள்ளவை. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை யோவான் கண்டு, கேட்டு மகிழ்ந்த மகிழ்ச்சியைக் குறிப்பிட இந்த வார்த்தைகளைப் பயன்படுத்தினான். ஒரு பொதுவான உண்மையை அவன் இந்தக் குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் பயன்படுத்தினான். இந்த இருபத்தோராம் நூற்றாண்டில், உத்தமமானவர்களைத் தம் மணவாட்டியாக எடுத்துக் கொண்டுபோக மணவாளன் பரலோகத்திலிருந்து வரக்காத்திருக்கும் நாமும் கூட அப்படிச் செய்யலாம். நாம் இப்படி காத்திருக்கையில் கர்த்தருக்குள்ளானவர்களின் திருமணங்கள் நடைபெறலாம். மணவாளனின் தோழன் மிகவும் சந்தோஷப்படுவான் என்று யோவான் சொன்ன அந்த சந்தோஷத்தை நாங்கள் சமீபத்தில் அனுபவித்தோம்.

எங்கள் மகன் கர்த்தருக்குள் சகோதரியாயிருந்த ஒருவரை மேற்குக் கனடாவில் மணம் புரிவதைப் பார்த்து, மணமகன் மற்றும் மணமகளின் சத்தத்தைக் கேட்க கனடாவுக்குப் பயணிப்பது எங்களுக்கு சந்தோஷமாயிருந்தது. இயேசுவை நேசிக்கும் இருவர் அவருடைய ராஜ்யத்தை நோக்கிக் கைகோர்த்து நடக்கத் தீர்மானித்து நடக்கும் திருமணம் உண்மையாகவே ஒரு மகிழ்ச்சியான நேரம் தான்.

இந்த இரு இளம்மக்கள் திருமணம் செய்தபோது, முன்பு ஒருவரையொருவர் அறிமுகமில்லாதிருந்த இரு குடும்பங்களை இணைத்தனர். இதற்கு முன் பார்த்திராத அவர்கள்மேல் எங்களுக்கு ஒரு ஈர்ப்பு தோன்றியது. அவர்கள் திருமணத்தினால் இதற்கு முன் ஒருபோதும் சந்தித்திராவிட்டாலும் அன்பினால் நெருக்கமாய் ஈர்க்கப்பட்டு நேசம் மிகுந்த இளம் தம்பதி நடுவில் இருக்க அன்பின் வட்டக் கதிர்கள் அவர்களினின்று தோன்றி அநேகரை ஆட்கொண்டன.



கிறிஸ்துவிலும் இதே மாதிரித் தானே இருக்கிறது? நாம் அவருடையவர்களானதாலே, அவரை நேசிக்கும் அநேகரை நாம் நேசிக்க ஆரம்பிக்கிறோம். இந்தப் பொதுவான அன்பின் கட்டு இல்லாவிடில், மற்றபடி நாம் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ள வாய்ப்பிருந்திருக்காது. நாம் நேசிக்கிற அதே ஆண்டவரை நேசிக்கும் சகோதர சகோதரிகள் பால் நாம் ஒரு நெருக்கத்தை உணர்கிறோம். உலகிலேயே மிகவும் விலையேறப்பெற்ற ஒன்றைப் பொதுவானதாகப் பெற்றிருக்கிறோம் - இயேசுவின் பால் நாம் கொண்டுள்ள அன்பும் பக்தியும்.

நம் மருமகளின் குடும்பத்தாரை நாம் நேசிப்பது போலவே, கிறிஸ்துவின் குடும்பத்திலுள்ள பிற உறுப்பினர்களையும் நாம் நேசிக்கிறோம். நாம் கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்களென்றால், நாம் ஆபிரகாமின் குடும்பத்தாராகிறோம். தேவன் ஆபிரகாமுக்கு அளித்த அனைத்து மகிமையான வாக்குத்தத்தங்களுக்கு வாரிசுகளாகிறோம்.

இயற்கையில் எப்படியோ, அப்படியே ஆவிக்குரியவற்றிலும் உள்ளது. கிறிஸ்துவோடு உறவு கொண்டவர்களாவதினால் திரளான புது உறவுகள் இதுவரை நாம் அறிந்திராதவர்களுக்கு உறவினராகிறோம். கிறிஸ்துவிலுள்ள நம் குடும்பத்தினரில் சிலரை ஆட்டுக்குட்டியானவரின் கலியாணத்தின்போது குடும்பமாகச் சேரும்வரை நாம் சந்திக்க இயலாது.

கிறிஸ்துவோடு உறவாடும், உறவு கொண்டாடும் இந்த வாழ்க்கை எத்தனை மகிழ்ச்சிகரமானது! இதைவிட இன்னும் மகத்தான சந்தோஷங்கள் எதிர்காலத்தில் நமக்கெனக் காத்திருக்கிறது. இப்பொழுது நம்மை ஒன்றாகக் கட்டும் சந்தோஷமானக் குடும்பப் பிணைப்புகளில் களிகூரலாம். ஆனால், மகிமை நிறைந்த அந்த எதிர்காலக் கலியாணம் நிஜமாகும்போது நமக்குக் கிடைக்கப் போகிற சந்தோஷத்தின்முன் இது ஒன்றுமில்லை.

இப்பொழுது நாம் உறுதிசெய்யும் (நிச்சயதார்த்தம்) காலத்தில் இருக்கிறோம். இது நீண்டகாலமோ, குறுகியதோ அறியோம். கலியாணத் தேதி நமக்குத் தெரியாது. ஆனால் ஒன்று நமக்குத் தெரியும் :- நம் மணவாளன் வரும்வரை நாம் அவருக்காக வாஞ்சையுடன் காத்திருக்கவேண்டும். இப்படிக் காத்திருக்கும் வேளையில் நாம் அவருக்கென உண்மையும் உத்தமுமாய் இருந்தால் தான் அவர் நம்மை ஏற்றுக்கொள்வார்.

ஏசாயா அழகாக உணர்ச்சிகளைக் கொட்டி எழுதியது போல், நாம் காத்திருக்கும் வேளையில், அவருக்கென உண்மையும் உத்தமமுமாய் வாழ்ந்து மகிழ்ந்திருப்போம். “கர்த்தருக்குள் பூரிப்பாய் மகிழுகிறேன், என் தேவனுக்குள் என் ஆத்துமா களிகூர்ந்திருக்கிறது. மணவாளன் வஸ்திரங்களினால் தன்னை அலங்கரித்துக்கொள்ளுகிறதற்கும் மணவாட்டி நகைகளினால் தன்னைச் சிங்காரித்துக் கொள்ளுகிறதற்கும் ஒப்பாக, அவர் இரட்சிப்பின் வஸ்திரங்களை எனக்கு உடுத்தி, நீதியின் சால்வையை எனக்குத் தந்தார்” (ஏசாயா 61:10).

# தேவனுடைய ராஜ்யம்... கோதுமையும் களைகளும்



“பரலோக ராஜ்யம் தன் நிலத்தில் நல்ல விதையை விதைத்த மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது” மத்தேயு.13:24.

தேவனுடைய ராஜ்யத்தின் தன்மை குறித்து இன்னொரு உவமையைக் கூற ஆரம்பிக்கிற நமதாண்டவர் இயேசுகிறிஸ்து “பரலோகராஜ்யம்... ஒப்பாயிருக்கிறது” என்ற வார்த்தைகளைக் கூறி ஆரம்பிக்கிறார்.

என்ன வல்லமையான ஆரம்பம், அறிமுகம்! பரலோக ராஜ்யம் எப்படி இருக்கும் என்று நாமெல்லாருமே அறிய ஆசைப்படுகிறோம். எந்த மனிதன், மனுஷிக்குத் தான் இந்த செய்தியைப் பெற ஆசை இருக்காது? இருப்பினும் இந்த உவமை நாம் எதிர்பார்ப்பது போல் இல்லை. ராஜ்யத்தின் காலத்தில் வாழ்க்கை எப்படி இருக்கும் என்பது பற்றி இவ்வுவமை எதுவும் சொல்வதில்லை. ஆனால், ராஜ்யத்தின் புத்திரரை உருவாக்கி, தேவன் எங்ஙனம் மக்களிடம் கிரியை செய்கிறார் என்பதைக் காட்டுகிறது. மத்தேயு.13:24-30.

*“பரலோகராஜ்யம் தன் நிலத்தில் நல்ல விதையை விதைத்த மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது, மனுஷர் நித்திரை பண்ணுகையில் அவனுடைய சத்துரு வந்து, கோதுமைக்குள் களைகளை விதைத்துவிட்டுப் போனான். பயிரானது வளர்ந்து கதிர் விட்டபொழுது களைகளும் காணப்பட்டது. வீட்டெஜமானுடை வேலைக்காரர் அவனிடத்தில் வந்து: ஆண்டவனே, நீர் உமது நிலத்தில் நல்ல விதையை விதைத்தீர் அல்லவா? பின்னே அதில் களைகள் எப்படி உண்டானது என்றார்கள். அதற்கு அவன்: சத்துரு அதைச் செய்தான் என்றான். அப்பொழுது வேலைக்காரர் நாங்கள் போய் அவைகளைப் பிடுங்கிப்போட உமக்குச் சித்தமா என்று கேட்டார்கள். அதற்கு அவன்: வேண்டாம், களைகளைப் பிடுங்கும்போது நீங்கள் கோதுமையையுங்கூட வேரோடே பிடுங்காதபடிக்கு, இரண்டையும் அறுப்பு மட்டும் வளர விடுங்கள். அறுப்புக்காலத்தில் நான் அறுக்கிறவர்களை நோக்கி: முதலாவது களைகளைப் பிடுங்கி, அவைகளைச் சுட்டெரிக்கிறதற்குக் கட்டுகளாகக் கட்டுங்கள்; கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்து வையுங்கள் என்பேன் என்று சொன்னான்”* (மத்தேயு.13:36-43) என்றார்.

*“சீஷர்கள் அவரிடத்தில் வந்து நிலத்தில் களைகளைப் பற்றிய உவமையை எங்களுக்கு வெளிப்படுத்த வேண்டுமென்று கேட்டார்கள். அவர் பிரதியுத்தரமாக: நல்ல விதையை விதைக்கிறவன் மனுஷகுமாரன். நிலம் உலகம்; நல்ல விதை ராஜ்யத்தின் புத்திரர்; களைகள் பொல்லாங்கனுடைய புத்திரர்; அவைகளை விதைக்கிற சத்துரு பிசாசு, அறுப்பு உலகத்தின் முடிவு; அறுக்கிறவர்கள் தேவதூதர்கள். ஆதலால் களைகளைச் சேர்த்து அக்கினியால் சுட்டெரிக்கிறது போல, இவ்வுலகத்தின் முடிவிலே நடக்கும். மனுஷகுமாரன். தம்முடைய தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவருடைய ராஜ்யத்தில் இருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ்செய்கிறவர்களையும் சேர்த்து, அவர்களை அக்கினிச்சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும். அப்பொழுது நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள். கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்.”*



## இரண்டு விதைகள் –ஆதியாகமத்திற்குத் திருப்புங்கள்

கர்த்தராகிய இயேசுவால் விதைக்கப்பட்ட ‘நல்ல விதையின் தன்மை குறித்து கற்க வேண்டிய பாடங்கள் இன்னும் இருந்தன. முந்தின உவமையைப் போல் நல்ல விதை ‘தேவனுடைய வார்த்தை’ என்றது போல் இங்கே இல்லை. நல்ல விதை என்பது இங்கே ‘ராஜ்யத்தின் புத்திரர்’ என்று பொருள்கொள்ளப்படுகிறது. (வ.38) நல்ல விதையோடு, பொல்லாங்கனால் களைகளும் விதைக்கப்படுகின்றன.

இரண்டு விதைகளைப் பற்றிப் பார்க்கும் போது வேதவாக்கியம் ஸ்திரீயின் வித்து (இங்கு ராஜ்யத்தின் புத்திரர்) மற்றும் சர்ப்பத்தின் வித்து (பொல்லாங்கனின் விதை) பற்றிக் கூறுவதை நினைவு கூருகிறோம்.

*“உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்”* (ஆதியாகமம்.3:15).

நல்லதும் கெட்டதும் ஒன்றாகவே வளருகிறது.

இருந்தாலும், இயேசு இப்பொழுது மிகவும் புரட்சிகரமான ஒரு செயல்முறையாக, ‘நல்ல விதையும்’ ‘கெட்ட விதையும்’ அறுப்புக்காலம் வரை (வ.30) ஒன்றாக வளரட்டும் என்றார். நல்ல விதையும் கெட்ட விதையும் ஒன்றாக அறுப்புக்காலம் வரை வளர்வது அல்லது உலக முடிவில் நியாயத்தீர்ப்பு வருவது குறித்த செய்தி இஸ்ரவேலின் மூப்பர்கள் கேட்க விரும்பிய செய்தி அல்ல.

நல்ல விதையும் கெட்ட விதையும் அறுப்புக்காலம் வரை ஒன்றாக வளர அனுமதிக்கப்பட்டது ஏன் என்பது தெளிவாகிறது. ‘களை’ என்பது மத்திய கிழக்கில் நச்சு தானியப் புல்வகை ஒத்தது. அது பூப்பூக்கும் வரை உண்மையான கோதுமையினின்று வேறுபடுத்திப் பார்க்க முடியாது. ஆகவே களையெடுக்க முயல்வது ‘நல்லவிதை’யின் அழிவில் போய் முடியும். ஆனால் தானியம் முதிர்ந்து அறுப்புக்கு ஆயத்தமா யிருக்கும்போது ‘கோதுமை’யும் ‘களை’யும் எளிதாக இனம் கண்டு கொள்ளப்பட முடியும். பாடங்கள் இங்கே தெளிவாயிருக்கின்றன: தாம் அறுவடை செய்யப்போவதாக இயேசு கூறுகிறார். ‘நல்லவிதை’யைக் ‘கெட்டவிதை’யினின்று பிரிக்க அவர் தமது தூதர்களை அனுப்புவார்.

# கணக்கு ஒப்புவித்தல்



தானியேல் வெப்ஸ்டர் என்பவரிடம் உங்கள் மனதில் வந்த மிகப் பெரிதான ஒரு எண்ணம் என்னவென்று கேட்டபொழுது, "வல்லமையான தேவனுக்கு நாம் கணக்கு ஒப்புவித்தல்" என்று பதில் கூறினார்.

பார்க்கப்போனால் இந்த சிந்தனை அநேக மக்களுக்கு வருவதில்லை. அநேகருடைய வாழ்க்கை குறையை காணும்போது அது அவர்களுக்கு தோன்றுகிறது இல்லை போலும். அவர்களுடைய வாழ்க்கை பிரதிபலிப்பதெல்லாம் ''புசிப்போம், குடிப்போம், மனமகிழ்ச்சியாய் இருப்போம் ஏனெனில் நாளை நாம் மரிப்போம்" என்ற உணர்வே ஆகும். இதைத் தவிர்த்து தேவனுக்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்ற சிந்தனையே இல்லை.

தேவன் எவ்வளவு வல்லமையுள்ளவர் என நாம் சிந்திக்க தவறும் போது இயேசு நமக்குக் கூறிய நம் பிதாவின் சித்தமின்றி அடைக்கலான் குருவிகளில் ஒன்றாகிலும் தரையிலே விழாது என்பதை நாம் நினைவு கூறவேண்டும். நாம் செய்கின்றதெல்லாம் அவருக்கு தெரிந்திருக்கின்றது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். பொதுவாக முழு உலகமே அவருக்கு கணக்கு ஒப்புவிக்கவேண்டும். ஏனெனில் அடைக்கலான் குருவி எப்பொழுது விழுகின்றது என்பது அவருக்குத் தெரியும். அதன் முடிவும் அதுவே. அநேகா அவ்விதமே வனாந்திரத்திலே மலரும் ஒரு பூவைப்போல வாழ்ந்து மரிக்கின்றனர். அவர்கள் எப்போதும் இல்லாதது போலவே தெரிகின்றனர்.

தேவனைக் குறித்த அறிவினால் நாம், நம்மை அவருக்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டிய ஒரு இடத்தில் வைக்கின்றோம். அவரிடமிருந்து அந்த மகிமையான பலனாகிய நித்திய ஜீவனை - அறிந்துக் கொள்பவர்களுக்கும் அவருடைய பிரமாணங்களை கடைபிடித்தவர்களுக்கும் அளிக்கின்றார்- பெற்றுக்கொள்ள தகுதியுள்ளவர்களாய் நாம் மாறுகிறோம் என்பதைச் சிந்தனை செய்யும் போது, உண்மையிலேயே இது நம் மனதிலே தோன்றும் ஒரு உன்னதமான எண்ணம் ஆகிறது.

ஞாயிற்றுக் கிழமைகளில் எங்களுடைய சபைகூடுவதற்காக வாடகை எடுத்துள்ள ஒரு பெரிய அறையில் நெருப்பு மூட்டும் ஒரு இடம் உண்டு. அங்குள்ள பெயர் பலகையில் உள்ள ஒரு வாசகம் "அறிவே வல்லமை" என்பது. தேவனை அறிகின்ற அறிவில் என்னதொரு வல்லமை உண்டு என்பதை நாம் சிந்திக்கும்பொழுது அது உண்மையிலேயே நம்மை திகைப்படைய செய்கின்றது. இந்த அறிவு ஒருவரை இரட்சிப்படைவதற்கேற்ற ஞானத்தை பெறச்செய்கின்றது. இந்த அறிவு மரித்த சடலங்களைக் கடைசி நாளன்று உயிர் பெற செய்யும் மிகவல்லமை உடையது இந்த அறிவு நம்மை சர்வ வல்லமையுள்ள தேவனுக்குக் கணக்கு ஒப்புவிக்கச் செய்யும் வல்லமையுள்ளது. யாக்கோபும் நமக்கு கூறுகின்றார், "ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாய் இருந்தும், அதைச் செய்யாமற்போனால்



அது அவனுக்குப் பாவமாயிருக்கும்" இப்பொழுது கேள்வி என்னவென்றால், தேவனுக்கு நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்பதை அறிந்திருக்கும்போது நாம் என்ன செய்கின்றோம்? எப்படி நடந்துக்கொள்கின்றோம்? பவுலும் ரோமசபையினரை இவ்விதமாக எச்சரிக்கின்றார். *"நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக் குறித்து தேவனுக்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டும்."*

இயேசு விளக்கின உண்மைகளை நாம் விளங்கிக் கொள்ளும்போது நமது வாழ்க்கை அவ்வுண்மையை பிரதிபலிக்கின்றதா? உதாரணமாக அவர் நமக்குக் கூறின *"மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கு ஒப்புவிக்கவேண்டும். ஏனெனில் உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய் அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய்"* இதைத் தெரிந்திருந்த பவுலும் இவ்விதமாக கூறி நம்மை எச்சரிக்கின்றார், *"அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்ல வேண்டும் என்று நீங்கள் அறியும்படிக்கு, உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருத்தினதாயும் உப்பால் சாரமேறினதாயு மிருப்பதாக."*

யாக்கோபும் நாவைக் குறித்த தீமைகளையும், அது நம்மை எவ்விதமான உபத்திரவங்களுக்குள்ளாக்கும் என்றும் நம்மை எச்சரிக்கின்றார். தேவன் நாம் பேசுகின்ற எல்லாவற்றையும் மாத்திரம் அறிந்தவர் அல்ல, அவர் நம் நினைவுகளையும் அறிந்திருக்கின்றார் என்பதை உணர்ந்துக்கொள்ளும் போது உண்மையாகவே நாம் அவருக்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்ற எண்ணத்தை ஒருபோதும் நாம் மறக்கமாட்டோம். அந்த புத்தி இல்லாத வேலைக்காரன் தன் எஜமானனுக்குத் தான் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்று அறிந்திருந்தும் அவனுடைய தாலந்தை மண்ணில் புதைத்து வைத்தது போல் நாமும் இருக்கக்கூடாது. தன் எஜமான் திரும்ப வருவார் என்பது அவனுக்குத் தெரியும், தன் தாலந்திற்குக் கணக்கு ஒப்புவிக்கவேண்டும் என்பதும் அவனுக்குத் தெரிந்திருந்தது. அப்படி இருந்தும் அவன் எதையும் செய்யவில்லை. புத்தியில்லாமல் அவ்விதமான நமது தாலந்துகளை மண்ணில் புதைத்து வைக்கும் தேவ ஊழியர்களாய் நாம் இல்லாமல் ஜாக்கிரதையோடு இருக்கவேண்டும். நாம் செய்ய வேண்டியதெல்லாம் முயற்சி செய்வதே, தேவனே விளையச் செய்பவர். ஆனால் ஏதும் செய்யாமல் சும்மா உட்கார்ந்து கொண்டிருப்போமானால் அவர் அதை நமக்கு அளிக்கமாட்டார்.

உண்மையிலேயே ''ஞானம் வல்லமையுள்ளது.'' பவுலின் வாஞ்சை *"இயேசுவையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும் அறிந்துக் கொள்வதாய்"* இருந்தது. ஞானம், விசுவாசத்தைப்போல் தனித்திருக்குமானால் பயனற்றது.

பேதுருவும் உண்மையிலேயே இவ்விதமாக கூறுகின்றார்: ''நீதியின் மார்க்கத்தை அறிந்தபின்பு, அதைவிட்டு விலகுவதைப் பார்க்கிலும் அதை அறியாமல் இருந்தால் நலமாய் இருக்கும்" -நமக்குத் தெரிந்திருப்பதினாலும் மேலும் நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்கள் என்பதையும் நாம் தெரிந்திருப்பதினால் தேவனுடைய உதவியோடு நமது அறிவை மனந்திரும்புதலுக்கேற்ற காரியங்களில் பயன்படுத்தி, இயேசுவின் வருகையிலே, அவர் மகிழ்ச்சியோடு நம்மிடம் "நல்லது செய்தாய்'' என்று கூறும்படியாக செயல்படவேண்டும்.